**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 11/2022 PW .5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாத்தையா | தந்தை/கணவர் பெயர்: சொக்கலிங்கம் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2026

---

**(எதிரி ஆஜர்)**

**<u>12.03.2026 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பொது அறுவை சிகிச்சை உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன் . கடந்த 16.01.2021ம் தேதி 08.55 மணிக்கு நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருக்கை மருத்துவராக பணியில் இருந்த போது திருமதி . ஐஸ்வர்யா, வயது –20 மதிக்கத்தக்க பெண் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு தன்னை அடையாளம் தெரிந்த நபர் ஒருவர் தாக்கியதாக தனது உறவினர் ஒருவரால் அழைத்து வரபட்டார் . மேலும் அவர் தன்னை அன்றையை தினமே மாலை 05.30 மணிக்கு நைனார் பட்டி என்னும் கிராமத்தில்அடையாளம் தெரிந்த நபர் தன்னை தலையைக்கொண்டு வாய் பகுதியில் தாக்கியதாக கூறினார்.

2. அவரை நான் பரிசோதித்த போது அவருக்கு வாயின் வலது கீழ் பகுதியில் உள்ள பல் ஒன்று இல்லாமல் இருந்தார் . ஆனால் வெளியில் இரத்த காயம் எதுவும் ஏற்படவில்லை. அவரை நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் அன்றையை தினம் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கி , மேலும் அவருக்கு திருப்பத்தூர் அரசு மருத்துவமனை பல் மருத்துவர் திரு . சுரேஷ் குமார் அவர்களிடம் கருத்துரை பெற்றேன் . பல் மருத்துவர் அவருக்கு வழங்கிய காயக்கருத்துரையின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதரணக் காயம் என்று சான்றுவழங்கினேன்.

மருத்துவர் சுரேஷ் குமார் வழங்கிய கருத்துரை மற்றும் காயம்பட்டவரின் காயத்தின் தன்மையை பரிசீலளத்ததில் எனக்கும் சாதரண காயம் என்று தெரிய வந்ததால் அதனடிப்படையில் விபத்து பதிவேட்டில் காயக்கருத்துரை வழங்கினேன் . **( நான் வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3.காயம்பட்டவரின் வாய்குள் ஒரு நபர் விரலைவிட்டு இருக்கமாக கடித்து கொண்டிருக்கும் போது விரலை உருகினால் மேற்சொன்ன காயம் பல் உடைந்து ஏற்பட்டிருக்க வாய்பு உண்டா என்றால் வாய்புள்ளது. ஆனால் அந்த காயத்தில் இருந்து மருத்துவமனையின் சிகிச்சைக்கு வந்த போது இரத்தகசிவு எதுவும் ஏற்படவில்லை . காயப்பட்ட பின்னர் மருத்துவமனைக்கு வந்த நேரத்திற்குள் இரத்த கசிவு நின்றிருக்க வாய்புள்ளதா என்றால் வாய்புள்ளது ஆனால் இரத்தகட்டு பார்க்கும்படி இருந்திருக்கும் . ஆனால் அவ்வாறு இல்லை. போலீஸ்சார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

4. அடையாளம் தெரிந்த நபர் ஆணா , பெண்ணா காயம்பட்ட நபர் என்னிடம் சொல்லவில்லை. பல் காயம்பட்ட நபருக்கு ஏற்கனவே கூட விழுந்திருக்கலாம் . வலி என்பது பசாங்கமாக இருக்கலாம் என்றால் இருக்கலாம் . நான் சம்பவம் நடந்ததாக சொல்லபடும் நேரத்திற்கு 4 மணி நேரத்திற்கு முன்பாக சம்பவம் நடந்திருந்ததால் வாய்வீக்கம், இரத்த கட்டு , இரத்தகசிவு இருந்திருக்கும். ஆனால் காயம்பட்ட நபருக்கு அவ்வாறு இல்லை.